# இது தான் நபி வழியா?

அபூ ஃபஹ்மிதா, தூத்துக்குடி

பல ஆண்டுகளாக இஸ்லாம் என்பது பலவித அனாச்சாரங்களிம் முன்னோர்களின் பழக்க, வழக்கங்களையும் கடைபிடித்து மண்ணறைவாசிகளையும் படைத்தவனுக்கு நிகராக வணங்குவதையும் கொண்டிருந்த காலம் போய் கொஞ்சம் கொஞ்சமாக ஓரிறையின் பக்கம் நாம் சென்று கொண்டிருக்கிறோம். சத்தியப் பாதையில் ஒரு நடை போடுகின்றது என்ற பிரச்சாரமெல்லாம் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் எந்த அளவிற்கு இறைவழியும் நபிவழியும் பின்பற்றப்படுகின்றது. நம்முடைய சொல்ம், செயம் ஒன்றாக இருக்கின்றதா? என்பதையும் நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக இந்த ஏகத்துவ பிரச்சாரம் குறிப்பாக தமிழகத்தின் மூலை முடிக்குகலெல்லாம் பரவியிருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால் அதன் மூலம் நடைமுறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றதா என்பதையும் நாம் மனதில் கொள்ளவேண்டும். இந்த ஓரிறைக் கொள்கையை எடுத்து வைக்கும் மார்க்க அறிஞர்களிடையே கூட சரியான அணுகுமுறை இல்லை. இந்த இயக்கம் தான் சிறந்தது. அந்த இயக்கம் தான் சிறந்தது என்று நிலைப்படுத்திக் கொள்வதற்கு, பத்திரிக்கையையும், அறிவியல் சாதனங்களையும் பயன்படுத்துவதில் காட்டும் தீவிரம், நபிவழியை நடைமுறைப்படுத்துவதில் காட்டுவதில்லை. இவர்களிடம் போட்டியும் பொறாமையும் இருந்தால் எப்படி இந்த ஓரிறை கொள்கையை மக்களிடையே நிலை நாட்ட முடியும். சொல்லிம் செயலிம் இறையச்சம் உணர்வு மேலோங்கி நிற்க வேண்டும் இந்த இறையச்ச உணர்வுடன் செய்யும் செயல்தான் மக்கள் மனதில் வேறுன்றி நிற்க முடியும் இதைத்தான் அல்லாஹ்வும் விரும்புகின்றான்.

அன்றைக்கு அறியாமை காலத்தில் காட்டு மிராண்டித் தனமாக வாழ்ந்த மக்களை எப்படி நபி(ஸல்) அவர்கள் சகோதர, மனிதாபமிக்க மனிதர்களாக மாற்றிக் காட்டினார்கள் இந்த குர்ஆனும், அவர்களின் வாழ்க்கை வழி முறையும் தானே? அவர்களது தன்னலமற்ற செயல்பாடுகள், உதவி செய்யும் மனப்பாங்கு, பகைவர்களிடத்தும் அன்பு செத்துவதும் அவர்களுக்கு நிகர் அவர்களே அவர்களது இந்த செயல்கள் தான் இந்த வாழ்க்கை முறைதான் இஸ்லாம் வளருவதற்கு உறுதுணையாய் இருந்தன. ஆனால் இன்று தலை சிறந்த பேச்சாளர்கள், தனது பேச்சாற்றல் மூலம் மக்களை வசீகரிக்கும் தன்னை, இணையற்ற அறிவியல் முன்னேற்றத்தின் பயன்பாடுகள் இருந்தும் நமது இஸ்லாமிய சகோதரர்களைக்கூட பெறுமளவில் ஏகத்துவத்தின் பால் கொண்டு வர முடியவில்லை. அப்படி ஏகத்துவவாதிகளாக இருந்தாம் கொள்கையில் உறுதியாக இருப்பதில்லை ஏகத்துவத்தின் பக்கம் இருக்கிறோம் என்ற போர்வையில் நமக்கு சுவர்க்கம் என்பது உத்திரவாதம் அளிக்கப்பட்ட ஒன்று அல்லது சுவர்க்கத்தை எளிதில் அடைந்து விடலாம் என்ற மமதையில் இன்று சமுதாயம் சென்று கொண்டிருக்கிறது.

இறைவழியும், நபிவழியும் அலட்சியப்படுத்தப்படுகின்றன. இஸ்லாத்தின் முக்கிய கடமையான தொழுகையையே அலட்சியப்படுத்தும் சூழ்நிலை காணப்படுகிறது. இன்றைக்கு தவ்ஹீத் வாதிகள் என்றாலே பெரும்பாலானவர்கள் சுப்ஹு தொழுகையினை சரியாக பேனமாட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மையாக இருந்து கொண்டிருக்கிறது. இதுதான் நபி(ஸல்) நமக்கு காட்டிய வழிமுறையா? நபி(ஸல்)

அவர்கள் தங்கள் இறுதி நாளில் நோயினால் அல்லல் பட்டுக் கொண்டிருக்கும் நிலையிம் தங்களின் தோழர்களின் துணையுடன் கால்கள், தரையில் கோடிட்டவாரே பள்ளிக்குச் சென்றார்கள் என்றால் பூரண நலத்துடன் இருக்கும் நம் சகோதரர்கள் எத்தனை பேர் ஐந்து வேளையும் தவறாது பள்ளிக்குச் சென்று தொழுது வருகின்றோம். மேம் எத்தனை பேர் பர்லான தொழுகைக்கு முன், பின் சுன்னத்தான தொழுகைகளை நிறைவேற்றுகின்றோம். நபி(ஸல்) அவர்கள் வலியுறுத்தப்பட்ட (சுன்னத்துல் முஅக்கதா) 12 ரகாஅத் தொழுகைகளை பேணுதடன் நிறைவேற்றுகின்றோமா? ஃபர்ளுடைய நிலைமையே இப்படி இருக்கும் போது சுன்னத்தை எங்கே பேணுவது. நபிவழி என்றால் அனைத்து செயல்களையும் மனமுவந்து வாழ்வில் கடை பிடிக்க வேண்டும்.

ஆனால் இன்று பெரும்பாலான சகோதரர்களை பார்க்கும் பொழுது இகாமத் சொல்ம் போது தான் பள்ளிக்கு வருவார்கள். அதே போல் சலாம் கொடுத்தவுடன் விர்ரென்று வெளியேறுவதும் இந்த கொள்கைச் சகோதரர்கள் தாம். இது தான் நபிவழியா? தொழுகைக்குப் பிறகு அல்லாஹ்வை புகழ்ந்து தக்பீர்கள் சொல்வது (சுப்ஹானல்லாஹ், அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹு அக்பர்) மற்றும் நமக்காக நாம் துஆ கேட்பது நமக்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறதா? ஃபர்ளான தொழுகைக்குப் பின் கேட்கப்படும் துஆக்கள் அதிகம் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாக இருக்கிறது என்று நபி(ஸல்) அவர்கள் கூறியி ருக்கிறார்கள் என்றால் துஆ கேட்பது நபி வழியில்லையா? ஒவ்வொரு தொழுகைக்கும் நபி(ஸல்) அவர்கள் சொல்லித்தராத துஆக்களை மனப்பாடம் செய்து விட்டு எத்தனை ஆண்டுகளானாம் அந்த துஆ மட்டுமே பேஷ் இமாம்கள் ஓதும் துஆவிற்குத் தான் ஆமாம்(ஆமீன்)சாமி போடக் கூடாதேயொழிய நாம் நமக்காக துஆ கேட்கக்கூடாது என்று சொல்லவில்லை. மாறாக நாம் நமக்காக நம் நாட்டங்கள் நிறைவேற துஆ கேட்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பல ஹதீஸ்களை நாம் பார்க்கின்றோம் அல்லாஹ்விடம் துஆவை விட மதிக்கத்தக்கது வெறொன்றுமில்லை என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக திர்மிதி, இப்னு மாஜா போன்ற ஹதீஸ் கிரந்தங்களில் பார்க்கின்றோம். அப்படி மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரார்த்தனையை நாம் எந்த அளவிற்கு உதாசீனப்படுத்துகின்றோம் என்பதை கொள்கைச் சகோதரர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே சலாம் கொடுத்தவுடன் தலைதெறிக்க பள்ளியை விட்டு ஓடாமல் இறைவனுக்கு விருப்பமான இந்த பிரார்த்தனையை கேட்போமேயானால் அது நமக்கு அதிகமான நன்மையை பெற்றுத்தரும் என்பதை நம் கவனத்தில் கொள்ளவேண்டும் மாறாக வேகமாக பள்ளியை விட் டு வெளியேறி வெளியில் பிற நண்பர்களோடு வெட்டிப் பேச்சு பேசுவதினால் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

அடுத்து பேசுவதில் மென்மை மற்றும் தன்னடக்கம். இந்தப் பண்புகள் ஒவ்வொரு சகோதரர்களிடத்திம் இருக்கின்றதா என்பதை ஒவ்வொருவரும் சுய பரிசோதனை செய்து கொள்ளவேண்டும். இன்று நடைமுறையில் பார்க்கும் பொழுது கூட இந்த பண்புகள் நம்மிடம் அரிதாகவே காணப்படுகிறது. அழைப்பாளர்களிடம் கூட இது போன்ற பண்புகள் காணப்படுவதில்லை. இந்த உலகத்தில் யாரும் நாம் தான் கடவுள் என்று சொல்வதில்லை, கடவுள் இல்லை என்று பலர் கூறலாம். ஆனால் நான் தான் கடவுள் என்று இறுமாப்பு கொண்ட ஃபிர்அவ்னிடம் நபி மூஸா மற்றும் அவருடை சகோதரர் ஹாருனையும் அனுப்பும் பொழுது மென்மையான சொல்லால் சொல்ங்கள் (அத். 20:44) இதனால் அவன் நல்பதேசம் பெறலாம் அச்சம் கொள்ளலாம் என்று இறைவன் நமக்கு சுட்டிக் காட்டுகின்றான் அப்படிப்பட்ட இந்த அணுகுமுறை நம்மிடம் இருக்கின்றதா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்த நம் சமுதாயத்தில் காணப்படும் மிகப்பெரிய குறைபாடு இசையில் மூழ்கிக்கிடப்பது. இசை என்பது நமக்கு இம்சையல்லவா? அது தடை செய்யப்பட்ட ஒன்றல்லவா? ஆனால் இசையை வெறுத்து ஒதுக்க வேண்டிய சமுதாயம் இசையோடு ஒன்றி வாழ்ந்து கொண்டிருக்கிறது. மேம் சீரழிக்கும் சினிமாக்களிம், இடர்கள் தரும் தொடர்களிம் தங்கள் பொன்னான நேரங்களை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். அது தவறா? தவறில்லையா? என்று பட்டி மன்றம் நடத்தினால் கூட 50 சதவீதம் மேல் சினிமாவிற்கு ஆதரவு கொடுக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். ஆபாசமான ஆடல் பாடல் காட்சிகளை குடும்பத்துடன் பார்த்து மகிழ்கின்றனர். அறை, குறை ஆடைகளுடன் குங்கும் மேனிகளை கண்டுகளிக்கும் இந்த (தவ்ஹீத்) கண் கள் அதே நிலையில் அவர்கள் சகோதரிகளையோ அல்லது மனைவியையோ பிறர் முன்னிலையில் பார்த்து ரசிப்பதற்கு விரும்புவார்களா? நபி வழி என்று முழக்கமிடுபவர்கள் இதை ஏன் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. காரணம் ஷைத்தான் நம்மை வழி கெடுக்கின்றான். இப்படிச் செய்வதை ஷைத்தான் நமக்கு அழகாகக் காட்டுகின்றான் பாங்கு ஒலிக்கும், மெட்டி ஒலிக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் மெட்டி ஒலியே மேலோங்கி நிற்கிறது. தொழுகை நேரத்தில் முக்கியமான தொடர் ஓடிக் கொண்டிந்தால் அங்கே தொடருக்குத் தான் முதலிடம், தொழுகையை எப்போது வேண்டுமானாம் தொழுது கொள்ளலாம். இரண்டாவதாக ஜமாஅத் வைத்துக்கூட தொழுது கொள்வார்கள் அல்லது தொழாமலே கூட இருந்து விடலாம். ஆனால் முக்கியமான சீரியல் என்றால் அதை அப்போதே பார்த்து விட வேண்டும் இல்லா விட்டால் அதை மீண்டும் பார்க்க முடியாது.

அந்தளவிற்கு நம் சமுதாயம் தொ(ல்)லை காட்சியோடு தொங்கி நிற்கிறது. அதற்காக டி.வி.ஐயே பார்ப்பது தவறு என்று சொல்லவில்லை, பொது அறிவை வளர்த்துக் கொள்ளக்கூடிய சோனல்கள் எத்தனையோ இருக்கின்றன. பல்வேறு **Educational Programmes** இருக்கின்றன. இதை அளவோடு பாப்பதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் ஒன்றுக்கும் உதவாத சினிமா பாடல்களையும், சினிமாக்களையும், தொடர்களையும் பார்த்து நம்முடைய நேரங்களை பாழடித்தால் நாம் இறைவனிடம் பதில் சொல்லி ஆகவேண்டும். நீ உன் வாழ்நாளை எவ்வாறு செலவழித்தாய் என்ற கேள்விக்கு என்ன பதிலை நாம் வைத்துள்ளோம் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

எனவே வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிம் நாம் எவ்வாறு நடக்கின்றோம் நபிவழியின்படி தான் நடக்கிறோமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழியில் நடப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்று கூறியவனாக நிறைவு செய்கிறேன்.

டிசம்பர் 2005 அந்நஜாத்